
கொச்சகம்.

சந்திஜெபஞ்செய்தேஜனங்கள் வந்தார் மடப்பிடியென்
பந்தலிலுபாசனமும் பண்ணிமுடித்தாரியபின்
அந்த வருந்தவிடபார்த்தா யின்னிலைபோட்டு
பந்துஜனங்களுடன் பன்பமுதருந்தினரே.

இ-ம் முகாரி - தாளம் ரூபகம்.

கண்ணிகள்.

மாப்பிள்ளையும் பெண்ணுஞ்சாப்பிடவே வந்துட்கார்ந்தார் முன்னே
சாப்பிட்டாரே யந்தப்பாப்புக்களும் வந்துசேர்ந்தார் க.

பந்திக்கிலைகரியன்ன மெல்லாம்பரிமாறினார் அன்னம்
முந்திப்போமென்று ஜனக்கிட்டிமேல் விழுந்தேகினார் உ.

சந்துஷ்டிசெய்தாரிருந்தத்தரஞ்சொல்லமாட்டார் மென்மேல்
வந்தவர்கள் திருப்தியாகவாகாரத்தைப்போட்டார் ௩.

கேட்டுக்கேட்டுப்பரிமாறு மெரிக்கிடப்போரார் இலை
போட்டுப்போட்டுப்பரிமாறுமின்னம் ஜெனம்வாரார் ௪.

எத்தனைபேர்வேறுமத்தனையும் வந்துசேரட்டும் பந்தி
வைத்தினிதன்னம் படைக்கிறோம் சோறுவல்திரட்டும் ரு.

இந்தவிதம் போசனஞ்செய்வதே தொழிலாச்சு இப்போ
அந்தந்தப்பேர் கையலுத்துதுப்பாயே போச்சு சா.

திருப்தியமுதுபுசித்தனைவருமே மகிழ்ந்தார் செந்தில்
நிதம் வளர்வேலர்க்கற்புதமாமென்று புகழ்ந்தார் எ.



கலித்துறை.

அறைப்பர் கரைப்பர்சமைப்பர்கள் கையொழியாமற் பந்தி
நிறைப்பரிலையும் போட்டுப்பரிமாறுவார் நீடியிரக்
தரப்பகலிராவுமிதுவே மணியஞ்சனங்கள் கண்ணித்
திரைக்கும் படுக்கக்கூடாமலிவ்வாறு இரிந்தனரே.

லாவணி.

கலங்களைத்தேய்ப்பாரும் சலங்கள்போய்மோர்ப்பாரும்
இலையெடுத்தெறிவாரும் தலைகளைச்சொரிவாரும்
உட்காருவார்களும் இளைப்பாறுவார்களும்
அம்மாடி என்பாரும் பம்மானமுன்பாரும்
வாய்வார்த்தை தொடுப்பாரும் பாய்போட்டுப்படுப்பாரும்
செப்புதனை எடுப்பாரும் தாய்முலைகொடுப்பாரும்
இடுப்புத்தான் போச்சென்பர் கடுப்புத்தீர்த்தாச்சென்பர்
அன்னாளிர போட்டுவார் தின்னறுப்புட்டுவார்
வாசலைச்சாத்தென்பார் விசுதுகாத்தென்பார்
சமைதலைக்கோசரம் அமைப்பார்கள் மீசரம்
படுப்பர் பயல்கள் கிட்டத் தொடுப்பர் கலவிமுட்ட
விடைக்குஞ்சற்றுவர் உடல்செக்கெதத்துவர்
சருக்காகத்தூங்குவர் குரட்டைகள் வாங்குவர்
அதனம் சாப்பாடென்பார் கதவுதான் போடென்பார்
கறிகொஞ்சமென்பாரும் சொரிகொஞ்சமென்பாரும்
அப்பளாம் பொடியென்பர் தொப்பளந்துடி என்பர்
வெல்லப்பம் வீசுவர் சொல்லிஷ்டம் பேசுவர்
பூப்போலே சோறென்பர் நீப்போலே சாறென்பர்
வயிற்றில் வேதனையென்பர் மிருத்துயாதனை என்பர்
மேச்சலதனையென்பர் காச்சல் விதனமென்பர்
காலைக்கடுக்குதென்பர் மேலைகடுக்குதென்பர்
செவிக்குப்பிடிப்பென்பர் தொழிக்குத்தடிப்பென்பர்
அப்பைக்கிக்குளிரென்பர் தொப்பைக்கி நளிரென்பர்
காலுக்குக்கடுப்பென்பர் சோறுக்குத்தொடுப்பென்பர்
நாகுவங்கணையென்பர் சோகுலங்கணையென்பர்
மாப்பண்ட மாகவே கூழ்ப்பாண்டம் வேகவே
பச்சடி கூட்டினார் ஒச்சடி மாட்டினார்
தேங்காய் தான்பித்தமே மாங்காயின் குத்தமே

செஞ்சைத்தான் கரிக்குமே   மஞ்சள்த்தான் பரிக்குமே
சந்தனைப்பணியுமே   இந்தனை தணியுமே

கலித்துறை.

படிந்தனரிவ்வாறமளியிற்போது பவிரெனவே
விடிந்தபின் யாவருமாற்றில் குளத்திலமேவிவந்து
சடங்கவுபாசனமுந்தாலப்பக்குச்சம்பாவனை மற்
றிடங்கலுமானபின் வந்தார் வயித்தியரானவரே.

இ-ம் இ-ம் தர்பார்—தாளம் சாப்பு.

பல்லவி.

வயித்தியர் வந்தேனென்று   வாகடங்கொண்டு
வயித்தியர்வந்தேனென்று

அநுபல்லவி.

வயித்தியனாரும் வந்தார்   பயித்தியத்திற்கிருப்பைப்பூ
வறுத்திடித்துத்தின்றுவிடு   திரத்தமருந்தாகுமென்று. (வயி)

சரணங்கள்.

ஞாலத்திலப்பிணியை யனா   நாழிகைக்குள் தீர்த்து விடுவேன்
மூலக்கடுப்புப்பொறுக்க   முடியவில்லை என்றனக்கென்று (வயி)

சாம்பலைக்கைவைத்திருந்து   தாம்பரபற்பமிதென்று
தானபகட்டியே திரியும்   ஆண்பிள்ளைச்சிங்கம் நானே (வயி)

குப்பைமேனியிலை யால   தெப்படியிருக்குமதைத்
செப்புமோர் மருந்துசெய்து   தப்பிதமின்றித்தருவேன் (வயி)

மருந்துப்பை வாகடமும்   வைத்ததைநான் கொண்டுவர
மறந்திட்டேனவர்கைக்கொண்டுபறந்திட்டார்களோவென்றேதி (வயி)

வாய்ப்பொடி கள்ளிப்பாலுடனே   மாத்திரை கொடுத்தோமானால்
கற்பூரம் தூக்கமது   மேற்கமை தீவாரவென்று (வயி)

ஆயிரம்பேரைக்கொன்றநா   மரை வயித்தியனேனே
ஞாயமோவினிமேல் கொன்றால்-நம்மையுங்கொல்லுவாரென்று (வயி)

என்னத்தைநான் கொடுத்தாலும்   மன்னத்துக்கேதும் வராமல்
முன்னிற்பாய் குருபரனே   றன்னித்தபிரியமாக-வயித்தி (வயி)



கலித்துறை.

அடுக்கும் வயித்தியர் கைபார்த்தவுடகமாக்கவர்க்குக்
கொடுத்தனர்நோயுங் குணமாச்செலமோர்களுங் கொக்கரித்தார்
கட்டுக்கட்டுப்பொங்களுத்தோசையும் வீதிதோலங்கி நலுங்
கிடச்செய்ய மாப்பிள்ளையும்பெண்ணும் பந்தலிருந்தனரே.

நலுங்கு.

௧. திட்டவணியுமலங்கரித்தார்   சிறந்தவர்ன்னப்பாய் விரித்தார்
தட்டுமுட்டுச்சேகரித்தார்   சகலர்களுங்கொக்கரித்தார்.

௨. அப்பளாங்களொடுத்துவைத்தார்   அரிசிமஞ்சள் படுத்திவைத்தார்
செப்புமலர் தொடுத்துவைத்தார்   சேகரமாயலங்கரித்தார்.

௩. சாதிமஞ்சள் தனையரைத்து   சந்தனவில்லைகள் கரைத்து
வேதமொழிதானுரைத்து   வீற்றிருந்தார் சனங்களெலாம்.

௪. மின்னைச்சொல்லெனவாடி   விளருடனே சோபனம்பாடி.
வன்னமுலைதனைமூடி   வந்தனர்கள் பெண்கோடி.

௫. பரிசனரைக்கூட்டிக்கொண்டு   பணிகளெலாம்பூட்டிக்கொண்டு
மருமலர்கள் சூட்டிக்கொண்டு   வந்தனர்கள்மாதரெலாம்.

௬. பந்தலெல்லாம் பரிமளிக்க   பாவையர் பாவினைதெளிக்க
வந்தபரிசனர்களிக்க   மாப்பிள்ளைபெண்ணுமிருந்தார்.

௭. மங்களமாக்கல்யாண   மாப்பிள்ளைபெண்ணையுங்காண
சங்கதியாய்த்தானேபோன   சம்மந்திமார்கள்வந்தார்.

௮. மாப்பிள்ளைபெண்ணிருவர்களும்   வகைவகையாய் நலுங்கிடவே
பாப்புக்களெல்லாரும் நின்று   பார்த்திருந்தார்.மகிழுடனே

௯. புத்தப்புது மாப்பிள்ளைபெண்   புகழ்ந்து நலுங்கிட்டபின்னே
மற்றமற்றமாப்பிள்ளைபெண்   மார்களுமே நலுங்குமிட்டார்.

௰. இந்தவிதமாப்பிள்ளைபெண்   இருவர்களும் நலுங்குமிட்டு
செந்தில்வடிவேலவரைத்   தியானஞ்செய்தே வீற்றிருந்தார்.

கலித்துறை.

நலுங்கிட்டபின்னவர்க்கும் தாம்பூலம் நன்குயளித்து
சலங்கையிற்சந்தனபுஷ்பம் யாவருஞ்செய்தெழுந்து
நலம்பெறப்பந்தி இருந்தமுதுண்டன்றி ராத்திரியில்
அலங்கிருதமாய்ப்பெண்ணுமாப்பிள்ளையுமூஞ்சலாடினரே.

இ-க இ-ம் சங்கராபரணம்—தாளம்-ஆதி.

பல்லவி.

ஊஞ்சல்ப்பாட்டுப்பாடுங்கடி பெண்களாரிங்கள்
ஊஞ்சல்ப்பாட்டுப்பாடுங்கடி.

அநுபல்லவி

ஊஞ்சல்ப்பாட்டுப்பாடுங்கடி. பொருக்காசேவ்வாரிவாரித்
தாஞ்சர்க்கரைத்தேங்காய்ப்பாலுஞ்-சாப்பிட்டசமத்துப்போல-ஊஞ்ச

சரணங்கள்

௧. சாத்திரியார் வீட்டுப்பெண்ணே செல்லத்தின் பெண்ணே
சாமண்ணையர்வீட்டுப்பெண்ணே (ண்ணே
வாத்தியார்தன்பேத்திப்பெண்ணே-மாளிப்பெண்ணேதோழிப்பெ
சோற்றுக்குக்கேடாயிருந்துதூங்கித்தூங்கிவிழுவானேன்-ஊஞ்சல்

௨. பாட்டடைத்தருக்கைக்கனே காமுகரிச்சப்
பட்டபண்டங்கொடுக்கையனே
எட்டிக்கிட்டுப்போட்டுச்சொல்லிக்கொண்டேகையேகேளன்றுபல்லுக்
காட்டியேநீங்கள்சற்றைத்தக்காய்ச்சிக் குடிக்கவாபோனீர்ஊஞ்சல்.

௩. சும்மாசம்மாகத்தினீர்களே சாத்திரிளெல்லாம்
தொண்டைத்தண்ணீர் வத்தினீர்களே
பம்மாத்துக்காரிகளேநீர் பாடிறோராசாதத்தே
அம்மங்கார்தன் பாட்டுக்கேட்க வாசைப்படுறீரெல்லாரும் ஊஞ்
சல்.

ஊஞ்சல்

௧. தாலவபிரம்பினாற்றுகால்கள் நாட்டி
தனிரானிகேர்யதால் விட்டம் போட்டு



ஆலமரத்தாலுயர்ந்த பலகை சேர்த்து
ஆணிகட்டுசங்கிலியால் வடங்கள் பூட்டி
பரிமளத்தாலுயர்ந்த பலகை சேர்த்து
பசர்சேர்ந்தவகுத்தநாலு பந்தல் போட்டு
மாவிலைகட்டுக்கிழக்குமுகமாக வேதான்
மாப்பிள்ளையும்பெண்ணுமிருந்தாட ஊஞ்சல்

௨. தொத்தன்மகன்வெட்டிவந்தகால்கள் நாட்டி
சொறிக்கிலயன் வெட்டிவந்தவிட்டம் போட்டு
சத்திரத்தினோக்கிவந்தபலகை சேர்த்து
தாமரைவிழுதால்திருத்தகயிறு பூட்டி
முத்துவையகுலமைத்த கொடுக்கை சேர்த்து
மூக்கரைநாறானைமேத்தவுஞ்சல் மீது
வத்தல்பொங்கல்தோசையுந்தின்றேப்ப மிட்டு
மாப்பிள்ளையும்பெண்ணுமிருந்தாட ஊஞ்சல்

௩. சொறிப்பெரியான் குழிகெல்லிக்கால்கள் நாட்ட
தொள்ளைக்காதுபழனி விட்டம் போட
கறுப்பன்றுடைத்த நீத்தால்பந்தல் போட
கணபதியாசாரிவந்துபலகை சேர்க்க
செறிக்கிறநூர்திரித்து யிசுக்குறிகள் போட
செல்லன்மகன்கயிறுபின்னி வடங்கள் பூட்ட
மறைப்பெரியோரெல்லோரும் புகழ்ந்து வாழ்த்த
மாப்பிள்ளையும்பெண்ணுமிருந்தாட ஊஞ்சல்

௪. எத்தனெனிநானேர் வடந்தொட் டாட்ட
இனிச்சக்கன்நானேர்வடந்தொட் டாட்ட
முத்தய்யன்சேஷனுமோர்வடந்தொட் டாட்ட
மூக்கரைநாணுமோர் வடந்தொட் டாட்ட
அத்தானம்மாளுமோர்வடந்தொட் டாட்ட
அம்மானம்மாவுமோர் வடந்தொட் டாட்ட
வத்தலம்மங்கார்க்கினிய கொழுந்த னோ
மாப்பிள்ளையும்பெண்ணுமிருந்தாட ஊஞ்சல்

௫. கன்னியுடனத்தையுமோர்வடந்தொட் டாட்ட
காத்தனூர்ராணியுமோர்வடந்தொட் டாட்ட

பொன்னியும்பூரணியுமொருகுடைக்கொட் டாட்ட
புனைவிழித்தங்கையுமொர்வடக்கொட் டாட்ட
சின்னியும்பொன்னம்மாளும் வடக்கொட் டாட்ட
சொத்தையார்செல்லமுமொர்வடக்கொட் டாட்ட
மன்னிதங்கைக்கோர்படிகுமார ருண
மாப்பிள்ளையும்பெண்ணுமிருந்தாட ருஞ்சல்

௬. காற்றடித்துக்கல்யாணப்பந்த லாட
கதலிமுருகளாடக்கன்ன லாட
தோற்றையுண்ணும்வாயாடக்கையு மாட
சுருதியர்கள்சிகையாடத்தொந்தி யாட
எத்திடும்பெண்கள்மடியில்தோகை யாட
இருகரைக்காய்முலைமடவார்தொங்கி யாட
வாத்தியார்தோளில்மடிசஞ்சி யாட
மாப்பிள்ளையும்பெண்ணுமிருந்தாட ருஞ்சல்

௭. தங்கமுருகொன்னப்பூத்தொங்க லாட
தரித்திடும்பொற்குறையாடத்திருகு மாட
துங்கமுள்ளமலர்மாலைத்தாலி யாட
சுந்தரவாணுதலினிற்பொற்பட்டி யாட
கங்கணமுங்கிளையுமிருகையி லாட
கமலத்தான்சிலம்புகலிர்கலிரென் றாட
மங்கைமார்மயில்போல் நட மாட
மாப்பிள்ளையும்பெண்ணுமிருந்தாட ருஞ்சல்

௮. உதட்டிமேலொருசாணிண்ட பல்லும்
உருஞ்சுபுகையிலைப்பொடியுமுறை மூக்கும்
சதைப்பத்தில்லாதகுஞ்சுமாறு டம்பும்
டமருகம்போலேகுரலுஞ் சொல்லுந்திக் கையும்
கதித்தபட்டைடாமமுடன்கோண மூக்கும்
கல்யாணக்கோலமுங்கண்காட்டு காண
மதித்தெகருங்கொண்டாடிமகிழ்ச்சி கூற
மாப்பிள்ளையுபெண்ணுமிருந்தாட ருஞ்சல்



தார்வாழிநாலாசாதிகளும் வாழி
கலைவாழி மால்வாழிதிருவும் வாழி
தார்வாழியூர்வாழிதனையர் வாழி
தனியாயிக்காடகமும் தழைக்க வாழி
ன்வாழி பெண்கொள்பிள்ளைகளும் வாழி
எப்பொருளுமப்பொருளுமிசைந்து வாழி
பார்வாழிமாப்பிள்ளையும்பெண்ணும் வாழி
பண்புவடிவேலவரும் வாழி வாழி

லாலி.

ஓராறுமலர்முகா உம்பர்தொழும்பூபா
ஒற்றைநக்கொம்பனுக்கிளைய ஒக்காருபா லாலி.

அதிபாவைக்கிடோன அசுரசம்ஹாரா
ஆகண்டலன்போற்று மமரராதிகாரா லாலி.

ரதிக்குமாரதமிழ்முனிக்கு ஞானமுபகாரா
சடாணைந்திறாகமிசை டக்கிடுகுஞ்கிடகாரா லாலி.

கடவுளிபமாதருந்த காரிகைமணாளா
கமழ்ந்திலங்குபரிமளப்பொற் கடகமணிதோளா லாலி.

உடனைப்பரமக்கிஷ்ட முருகவுத்தியாளா
உயர்தபோதகர்தேவ குஞ்சரிபொற்றூளா லாலி.

அன்பளினூமருணகிரிக் கருநருங்கனிவாயா
அழகிஇயர்மயூரகிரி யமர்ந்திடும் கன்னேயா லாலி.

அம்பிகைக்குமைமுகத்து மருமைத்திருசேயா
ஆனந்தரூபாநடமுக கார்த்திகேயா லாலி.

விருத்தம்

கந்தருஞ்சல்பாட்டிப்பும் வண்ணக்கள்
பாலினக்கன் கிளைப்பாட்டும்பாடி
வந்தவர்க்குச்சந்தனம் பாக்கிலைகொடுத்து
பிள்ளைபெண்ணுஞ்சல்விட்டுத்திறங்கி

விந்தைதொள் பக்கைசப்பொபாலத்திகற்றி
வேசமுறைத்துட்புகுந்துட்கார்த்தபின்பு
அந்தமுள்ளவுஞ்சலப்ப மோதிவிட்டான்
கானதறபின் சாப்பிடஉட்கார்ந்தாரன்றே.

இ-ம் சங்கியாசி—தாளம்-ஆதி.

கண்ணிகள்.

௧. சாப்பிடவுட்புகுந்தாரே — தூங்கிறபேரைக்
கூப்பிடவேபுகுந்தாரே.

௨. குத்துவிளக்கேற்றினரே — வாராதபேரைக்
குற்றஞ்சொல்லித் தூற்றினரே.

௩. தேங்காயுடைத்துப்பால்பிழிந்தார் — உப்புச்சாறுகள்
பாவகாய்ச்செய்துளமிழ்ந்தார்.

௪. எத்தனைநாழிகைசெல்லுமென்பார் — விடியயின்னம்
பத்துநாழிகைசெல்லுமென்பார்.

௫. போத்திக்கொண்டுதிரிவாரும் — சளசளென்று
மூத்திரத்தைச்சொரிவாரும்.

௬. இறுக்கம்வெகுதேன்போர்க்குறார் — இலேபோடேண்டா
குறைப்பொழுதுகொட்டைநூர்கிறாய்,

௭. அந்தம்பியாரையெழுப்படா — சக்கசக்சென்று
கத்துகிறுயென்னகொழுப்படா.

௮. மத்தியானஞ்சாப்பிடலையே — அம்மாஞ்சியென்கிறே
சிற்றப்பாவைக்கூப்பிடலையே.

௯. குருகுரென்றுவிழிக்கிறுண்டா — கத்திகொட்டிப்போய்
பருவதம்போய் கழிக்கிறுண்டா.

௰. சிற்றப்பாபடுத்துத்தூங்குறார் — எழுப்பப்போனால்
மெத்தவேகுரட்டைவாங்குறார்.

௰௧. பெண்டுகள் சாப்பிடவில்லையே — சொல்லப்போனாலும்
சண்டைவரும்மகாதொல்லையே.

௰௨. குட்டிகளையெழுப்பாதடா — போதுவிடிய
மட்டுமிரையுமோயாதடா.



மத்தியானமேசொல்சாப்பிட — ஒவ்வொருத்தராய்
எத்தனைதரம்போய்க்கூப்பிட.

வத்தல்பொரிக்கல் தோசைமாட்டினார் — அதுமட்டோபின்
எத்தனைவராயோஊட்டினார்.

அப்பளாஞ்சோறுபதார்த்தமே — மூக்கைப்பிடிக்க
இப்போதான் இன்றுசெதார்த்தமே.

நிறைந்திருஞ்சால் நீர்கொள்ளாதடா — அக்குணியன்னம்
குறைக்கெழுந்திடத்தள்ளாதடா.

முத்தண்ணாவைக்கூப்பிடடா — எழுப்புறதார்
மெத்தவுந்தானிறுமாப்படா.

எழுப்பினுலெழுந்திருாடா — போதுவிடிந்து
விழித்தபின் குற்றஞ்சொல்வாரடா.

பத்திரந்தப்பிப்பிழையடா — கண்டெவனோபார்த்து
அத்திரந்தன்னால்நுழையடா.

சண்டைவரும் வாயைமூடுங்கள் — காலைப்போதும்போய்
உண்டானகூத்தெல்லாமடுங்கள்.

சப்பன்வாய் சும்மாயிருக்குமோ — இருக்கமாட்டார்
தெப்படித்துறுதுருக்குமோ.

இவளவுபோதும் பிரஸ்தாபமே — இனிப்பேசினால்
இவனறியவருங்கோபமே.

வந்தவர்சாப்பிட்டுப்போகட்டும் — மற்றவர்க்கு
விடிந்தபின்னுதிருமாகட்டும்.

முருகர்சரணத்தை வத்துங்கள் — நெற்றியினிலே
திருவெண்ணீறணிந்துச்சாத்துங்கள்.

இ-ம் நாதநாமக்கிரியை—தாளம்-ஆதி.

கண்ணிகள்.

௧. இலைபடுத்துப்போட்டுச்சலந்தெளித்தார் — தூங்கிக்
கிடந்தபேரெல்லோருங்கண்ணைவிழித்தார்.

௨. உறவிலேவந்துவந்துட்கார்ந்தார் ஊர
மாட்டோமென்றவரும்வந்துசேர்ந்தார்.

௩. உபசாரம்பண்ணியேயரிசாகுமோ தாத
முண்டாலொழியப்பசிதான்போகுமோ.

௪. அவரவர்பசித்தால் சாப்பிடுங்கள் வேண்டாட்
டாலொழிந்துவிடம் போய்ப்படுங்கள்.

௫. அன்னம்வேணுமானால்சொந்தம்பாவியும் வேண்டாட்
டாலுமுங்கள்பெருமானைச்சேவியும்

௬. குழுகுமென்றமனைக்குவத்துலே மோர்க்
குடமொழுகுதடியிலேபொத்தலே

௭. நாமுட்கார்ந்ததுநல்லவிடமடா பாயோ
நகத்தினதாலுடைந்தகுடமடா

௮. விருப்பன்றுமல் வந்தால் சோறுப்பிடுங் சந்தே
வேலம்மாளைப்பரிமாறக்கூப்பிடும்

௯. அகப்பையெங்கேசட்டியெங்கேகாணமே ஓசே
யடுப்பங்கரையெல்லாந்திருகோணமே

௰. ஊறுகாய்ப்புவையிலேபார்த்துமே அன்னமிட்
டுப்புச்சாறகப்பையால்மொண்டேற்றுமே

௧௧. காலுதுபகல்சமைத்தகறியடா வாய்க்கி
தன்றாயிருந்தால்இன்றுபார்த்தெரியடா

௧௨. பகல்சமைத்தபருப்புஉசிப்போச்சடா இங்கே
பரிமாறவேண்டாம்பளாதன்றுச்சடா

௧௩. அதிர்த்தியமாய்ச்சலந்தந்தாரடா சிச்சி
அரிசிகளைந்தெங்கழுநீரடா

௧௪. பந்திபந்துக்கள்செய்தவனாரடா தேங்காய்ப்
பாலெடுத்தெல்லார்க்கும்பரிமாறடா



௧௫. பிந்திவந்துட்கார்ந்தவர்க்குமோரடா சோற்றைப்
பிசைந்துகொண்டேசிச்சொல்வாரடா

௧௬. மோரெல்லாமோருமோடத்தான்போகுதே இரண்டு
மூன்றுபேர்களுக்குமொன்றாகுதே

௧௭. நிறைத்துத்தாரோசனம்வாரடா விடிய
நேரமாச்சுதேதாஇல்லையோபாரடா

௧௮. வேதியரெழுந்திருந்துமோதுறார் ஒடி
வேலைக்கோயிலிலே சக்குதூறார்

௧௯. காதிலேகேளாததென்னபாக்கடா இனி
காசிமென்னபடுத்துத்தூங்கடா

விருத்தம்.

அஷ்டபிராமணர்த்தனமுமோதி
யான்கற்பின்பொழுது விடிந்துடனே கன்னி
சட்டமொடுசெந்நிலுபதபங்கள் செய்து
தாவாரமுன்றில்மனை மெழுகிக்கூட்டி
பொட்டெனவேமுழுகிவந்துதிலுமித்திப்
பூவையார்களலங்கரித்துத்தலைகள்பின்னி
இஷ்டமுடன்மனையிருந்தபொங்கற்செய்
தேவர்க்குந்தாம்பூசைமிகுந்திட்டாரே.

இ-ம் முகாரி- தாளம் -ரூபகம்.

கண்ணிகள்.

| | | |
|---|---|---|
| தாம்பூசைமுடிந்தபின்னே | பழஞ்சோறு | சாப்பிடப்புகுந்தாரே |
| சோம்பலடியாதே | கடைக்கடைத் | தோசையும்வினைரே |
| வத்தல்களப்பளங்கள் | பொங்கல்பரி | மாறினதும்முகர்ந்தார் |
| எத்தனையோருசிக்க | தெல்லாமவ | ருந்தவர்சட்டித்தார் |
| தாகந்தவித்தவர்க்கு | நீருமோருந் | தண்ணீருந்திடுவோர் |
| சாகபாகாதிகளில் | சனங்கள் | சந்தோஷமாய்ப்புசித்தார் |

௪. கூடியேமாதர்களும் அமுது குறைவன்றியேபுசித்தார்
நாடியேமாப்பிள்ளைக்கும்பெண்ணுக்கும் நலுங்கிட்டுமகிழ்ந்தார்.

௫. ஊஞ்சலாடியானதினில் செய்யும்சேவை ஹோமங்கள்தான்புரிந்து
வாஞ்சையாய்த்தாம்பூலத்தைத்தரித்தனர்மாப்பிள்ளைபெண்ணுமன்பாய்.

விருத்தம்.

பலதானந்தாம்பூலதானமுள்ள
பலரடங்கும் பரிபளிக்கச்செய்தபின்பு
கலைஞர்சொல்பாட்டுநடனநாட்டியங்கள்
கண்காட்சிகளுமாதிக்களித்திருந்து
இலைகறியன்னங்கள்பரிமாறிப்பந்தி
இருந்துபோசனஞ்செய்து படுத்துத்தூங்கி
கலமுடனேகாலாகாள் நாகவல்லி
நடத்திரைமணிமிகப்படுத்தினரே.

இ-ம் ஆநந்தபைரவி—தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

௧. பொங்கல்சோறைபுராதனம்புசித்து மகிழ்ந்தார்
மங்களச்சோபனம்பாடிமாதர் புகழ்ந்தார்

௨. பாங்குடனவுபாசனமும்பண்ணி முடித்தார்
தேங்காய்வெல்லத்தொடுபெருப்புத்தேங்காய் பிடித்தார்

௩. நிரெடுத்துச்சால்குடங்கள்நிறைவே [illegible] வைத்தார்
ஏராளமாய்ப்பலாப்பழத்திலீயென மொய்த்தார்

௪. திட்டமாகவேசமையல்செய்து நாடினார்
சட்டமாகசதிருடன்சங்கீதம் பாடினார்

௫. சனங்களெல்லாமெண்ணெய்தேய்த்துத்தலை முழுகினார்
மனங்களிப்புடன்கல்யாணவீடு ஒழுகினார்

௬. வஸ்திரந்தாம்பூலமலர்மாலை யணிந்தார்
முத்தமிடிவேலவரைப்போற்றி மகிழ்ந்தார்



௭. சங்கைகளில்லாமேளதாளத்தான் முழங்கவே
மங்கையராலத்திசுத்திய வழங்கவே

௮. மாப்பிள்ளையும்பெண்ணும்வந்துமனை புகுந்தனர்
சாப்பிடத்தனம்பண்ணித்தான் மகிழ்ந்தனர்

விருத்தம்.

பந்தியிருந்துண்பொழுதில்நாளிகேர
பாத்திரமென் பாத்திரத்திற்பாயசத்தைச்
சந்ததங்கைக்கொண்டுபரிகாசஞ்செய்து
தக்கபெண்கள் வைத்தனர்சம்பந்திமார்க்கு
விந்தையுடன்மஞ்சளார்குங்குமத்தைத்
வேடிக்கையாய்த்தடவி விளையாடியோடி
இந்தவிதம்வந்தவர்கள்பெண்களோடு
விளையாடல்புரிந்திருந்திட்டாரே.

இ-ம் ஆனந்தபைரவி - தாளம் - ரூபகம்.

கண்ணிகள்.

௧. சந்திபண்ணிவந்தபின்பு சதிருடன்மாப்பிள்ளைபெண்ணுக்கு
கந்தமலர்மாலையிட்டுக் கட்டிவைத்தார்

௨. சுந்தரமாய்வரிசைகொண்டு தோழிப்பொங்கல்தானெடுத்து
அந்தணர்குழாங்கள்வேதத் தியானமுறையடித்தார்

௩. மத்தளங்கள்தத்திருமல் வாத்தியங்கள்முழங்க
எத்திசையுஞ்ஜெயஜெயவென் றேமனுக்கள்வழங்க

௪. மங்கையர்காட்டியமாட வாணர்களிப்பாட
துங்கமுள்ளவாணவித்தை துலங்கிடிகீட

௫. அங்கங்குளமாமடவா ராரத்திஎடுத்தார்
மங்கையர்கள்சொகரிகல்யா ணங்கள்சொல்லத்தொடுத்தார்

கொச்சகம்.

இத்தியாதிசம்பிரமத்தோடேசிவிகைமேலேற்றி
சித்திரமப்பந்தக்கருடனூர்கோலம்வந்தபின்னர்
வைத்தூஞ்சலாடியபின்வழக்கமுள்ளசீர்கொடுத்து
நத்துதலாய்வெயெரும் நாட்டியங்கள்செய்தாரே

விருத்தம்.

இட்டமொய்ப்பணமும்போட்ட வெழுதுடன்கடைச்சாதம்
சட்டமா[illegible]த்தபின்பு சம்பந்தமுங்கலந்தார்
ஒட்டறவுடையோர்தங்களூருக்குப்போகவுட்டன
கட்டிவிச்சோறில் வீட்டிற்கள்வுள்போனதன்றே.

இ-ம் ஆநந்தபைரவி—தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

௧. எல்கசேபோன்வகைசொல்றீ பெண்ணே முத்து
நத்தாரவராக்குச்சந்திரப்பிரபை கண்ணே
நீகதவென்னுங்கண்டிசரப் பணியும் பருத்
தட்டுமணியட்டிகையுங்கட்டுவட மணியும்.

௨. கல்வினைழந்தசந்திர முருகு காப்புங்
கடயமெங்கேயிதோசுடக்குதடி திருகு
கைபிடித்தவளையும் தங்கம் இரவல்
கையதுபோனால் வரும் அதிகவில் லங்கம்.

௩. பாடகமிருபதுபொன் னுமே யாரோ
பார்த்தெடுத்துப்போனரோ பறைக்குதெந்தன்மனமே
கூட்டப்படுத்திருந்தவர்க ளாரோ படுத்துத்
தூக்கைவிட்டுத்தூங்கினால் கொண்டுபோகாரோ.

௪. நித்திலச்சரத்துருவாக் கண்டாய் ஏண்டி
நிலைப்பிரியாக்கைபோல்விழிக்கிறாய் மூண்டாய்
விற்றுப்போடுவர் கடையில் காசி களவை
வெளிப்பண்ணவேணும் விடப்படுமோ இவ்வேளை.



௫. சொல்லப்போறேனுனக்கு கோப்பானம் சத்தம்
சொறுணைவில்லையோபெண்ணே தூக்கஞ்சண்டாளம்
கல்லாய்ச்சமைந்தோதி கிடந்தாய் நகை
கழற்றிப்போனதின் பிறகோவிழித்துக் கொண்டாய்மடந்தாய்

௬. பால்குடிக்கவிருந்தடமில் லாக்கு பால்
பணத்துக்குக்கொண்டாலும் பூனைகுடித்துப்போமேயூர்க்குள்
காவலாயனைவராய் னென்னுதே திருடன்
களவாண்டுகொள்வாண்டுகொண்ட வளிப்போதே.

௭. பாரிலபாதித்திருக்க பண்டம் அதை
பறப்பறித்துக்கொண்டுபோகலாச்சுதிது கண்டம்
தூரஇருந்திருக்கு வந்தாரோ சோரர்
சுத்துவோராய்நிவந்தவர்க ளாயவரோ.

கொச்சகம்.

கூடினோர்ப்பணக்கூட்டமலையுடைமை
தேடினோர் சிக்கைதகைத்தார் திருப்பாட்டுப்
பாடினோர்நேர்ந்தபடி பக்கவமீதுத்திருக்கட்ட
தாடினோர்வொறமனிபிகசெய்தாரே.

இ-ம் நீலாம்பரி—தாளம் ஆதி

கண்ணிகள்.

௧. அம்மாநீகண்டெடுத்தாலே சேவி அவ
னெப்படிக்கொத்தவனல்ல தோழி
அந்தநாளெடுத்தொளித்தானோ சேவி அவ
னடிமிதித்தவர்க்குண்டோ தோழி.

௨. குப்பன்கண்டால் கொடுப்பானோ சேவி அவன்
கொலைக்காரனே குடிகேடன் தோழி
குப்பன்மேல்சந்தேகதோணுதே சேவி அவன்
வைமையைச்சோதித்துப்பார்ப்போம் தோழி.

௩. மாளிகைடுத்துவைத்தானோ சேவி அவன்
வாயைக்கிண்டாதேபோதும் தோழி
நானுங்கண்டால் விடுவேனோ சேவி
நான்வட்டத்தில் வெளியாகுந் த

௩. எங்கள்சாமுவேட்பானே சேவதி ஆவ
னெடுத்தாலுங்கொடுப்பானே தோழி
வாத்தியார்கொண்டுபோறேரா சேவதி அவர்
மடிசஞ்சியைச்சோதிப்போம் தோழி.

௪. சாத்திரிமேல் ஐயமுண்டு சேவதி அவர்
ஸ்தாலீசவசம்பைத்தேடுறுவே தோழி
ஆரெடுத்தாரோசொல்லடி சேவதி கொந்தில்
ஆறுமுகர்க்குத்தெரியும் தோழி.

கொச்சகம்.

பய்யனப்படுவர் பயப்படுவர் நகைபோனா
லயனப்படாமல் மயங்கிக்கொண்டேயிருப்பர்
தயரப்படுவரினிச்சொரிடமாட்டார்களென்பர்
பண்டுபோய்ச்சுத்தைபடிப்பர் கொடுப்பர்களே.

௩௰ம் தோடி—தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

௧. கொஞ்சத்தில் விடுவேனோ கெஞ்சஞ்சாமல் நகை
கொண்டுபோனவ னாடா எங்கே
மிஞ்சிப்போனதை இப்போவஞ்சகமாய்ச்சற்றே
வெளியாக்குறேன் பாரடா.

௨. குப்பனெங்கேபுறக்கப்பியஞ்சொல்லாமல்
கூட்டிக்கொண்டோடி வாடா நெஞ்
சுப்பனைமாப்பி நகைபோன
சேதியைச்சுருக்காகச்சொல் போடா.

௩. அம்மாஞ்சி சுருட்டிக்கடுக்கன்வெள்ளி
யருணாக்கொண்டுபோறு னோடி சேவதி
சும்மாஇரைந்து நீசாபுராலபடுத்தாதே
அங்குராண்மீறு னோடி.

௪. காரணம்பண்ணிப்போட்டுவாரேனுனை
வந்தனைசுடினத்தினிலவெளி யாக்குறேன் தேவி
கொந்தவல்லிகடாக்ஷமுனனென்றுனிக்
கனமட்டிற் குவிர்க்கு றேன்.



௫. இப்போ தேங்காயோடிப்புதைக்கிறேன்நகை
யெடுத்தவன்வயிறு தப்புமா நமக்
கோப்புக்காளிகோயிலில்போறுவுடைமை
கொண்டொளித்தவிடகு செப்புமா.

௬. சட்டமாயொருகோழிமுட்டையோடிப்புதைத்தால்
தன்றாலேவெளி யாகுமே கொஞ்ச
மட்டிலேபோகாது நகை எடுத்தவனுக்கு
வயிறுபொருமிப் போகுமே.

௭. அஞ்சனம்போடத்தெரிந்தவரைக்கலை
டழைத்து வருவோம் நாமே மெள்ளக்
கெஞ்சிப்பார்க்கிறேன்தொந்திக்குப்பன்மக்
திரத்திலே கெட்டிக்கார னாமே

௮. சோசியர்கருவலோசிவயோயெடுத்ததாய்த்
தோணுதென்று சொல்லு ரார் ஒரு
பூசுரன்குட்டையோநெட்டையோவகைப்பற்றிப்
போறுனென்றவின்று ரார்

௯. ஆணோபெண்ணோகுருடிமெள்ளக்கொண்டே
யடக்கினதாய் தோணு தாம் நகை
பூணலமென்றுதரையிற்கெல்லிப்புதைத்தது
போலவேகாணு தாம்

௰. கோணங்கிகம்பளத்தான்வாயிலேயொரு
குழலைவைத்தேயூது றன் பிர
மாணமாயழைத்துக்கேட்டதற்கவன்வந்தாலும்
வரும்வராதென்றூது ரான்

௰௧. பஞ்சைக்கோலமாச்சந்தமஞ்சக் காணியைவிற்றுப்
பண்ணுவோம்நகை யினியே எங்கள்
குஞ்சப்பாகண்டாக்கால்கொஞ்சத்தில்விடுவாரோ
சொல்லுவான் பெரு முனியே

௰௨. பொல்லாப்பில்லாமல்நகைகொண்டவன்கொண்டு
போட்டாலெளிதா குமே வந்த
எல்லாப்பேரையுஞ்சீட்டிலெழுதிச்சுட்டால்நகை
யெடுத்தவன்பேர்வே குமே

௰௩. அகப்பட்டுக்கொண்டான் தம்பிட்டுப்பட்டாணியென்
றனைவரும்பழிப் பாரே மிகக்
கும்பலாய்க்கூடிக்கூடிக்கொல்லென்றெல்லோரும்
குறைசொல்லிநகைப் பாரே

௰௪. கவுந்துவமாய்விளக்கவித்தவன் றன்முழுக்
கள்ளனுள்ள படியே மனந்
தவிக்காமலுடைமையைத்தருவிப்பாரோகந்த
சுவாமியென்மனப் படியே

விருத்தம்.

வந்தனர்கல்யாணத்தின்வர்த்தனைக்காரரெல்லாம்
சந்தடியவரவர்க்குச்சம்சாயிபண்ணித்தீர்த்தும்
மந்திரமுண்டாகப்பாம்புப்பெட்டியுங்கையிற்கொண்டு
பந்தலிலேபாம்பாட்டும்பிடாரருந்தோன்றினரே

௬௩-ம் இ-ம்- உசேநி - தாளம் - ரூபகம்,

பல்லவி

பிடாரர்வந்தார் உள்ளுருப் பிடாரர் வந்தார்

அநுபல்லவி

பிடாரர்வந்தார் பாம்புப்பெட்டிகை
விடாமல்கொண்டநி வேகமதாகவே பிடா

சரணங்கள்.

க. பச்சோந்திவாலும் பச்சைப்பாம்பின்வாலும்
பதித்துமோதிரம் பண்ணிவிரலிட்டு
கூப்பிட்டாமலே பாம்பையெல்லாம்பிடித்
த்தி லடைத்துக்கொண்டுபாம்புப் பிடா



௨. மந்திரத்தாலும் மதியாலுங்கூட்டு
மருந்தாலுமெந்த விஷமுந்தீர்த்திடுந்
தந்திரக்காரன் தருகாமல் பாம்பை
தடைகட்டியாட்டும் சாமர்த்தியமுள்ள பிடா

௩. பாம்புப்பெட்டியும் மருந்துப்பையோடும்
பாக்குப்பைவெட்டித் தலைப்பாகையுடன்
வீம்புக்குக்கொண்டுதன் வீட்டைவிட்டுவெளி
விசையினால்நான்கு திசையிலுஞ்செல்லும் பிடா

௪. களக்குருணிக்கல் யாணவர்த்தனையக்
கண்டிடமெல்லாம்வாங் கும்படியேமாயோ
ளக்காமல்நமக் காரணப்பாரென்றே
அக்ரகாரத்தில்வ முக்கப்படிவாங்கும் பிடா

கொச்சகம்.

வந்தபிடாரர்களும் மாமந்திரத்தாலுந்
தந்திரமாமூலிகையால் சக்கரத்தால்தன்மதியால்
கந்தசாமியினருள் கடாக்ஷத்தினாலுமினிற்
தந்தமுள்ளபாம்பை எடுத்தாட்டத்தொடுத்தானே.

விருத்தம்.

கையிட்டுமண்டியிட்டுக்காலிட்டுக்காட்டிக்கண்ணில்
மையிட்டுமுத்தமிட்டுவாயிட்டுமோந்துகொண்டு
பையிட்டணிமணிப்பணமுடிநன்னகமதில்
மெய்யிட்டுவிடப்பாம்பொன்றைவெளிதனிலாட்டினனே,

இ - ம் - ஆநந்தபைரவி . தாளம். சாப்பு,

கண்ணிகள்.

தானதனதந்தன தந்த
னதந்தனதந்தனதந்தன தா

க. அம்பிகையருளருமைப்பாலர் மூத்த
ஐந்துகரர்தம்பினனவந்தவனுகூலர்
நம்பினவர்க்கருள்வடிவேலர்
நன்றாகவேபணிந்துநின்றாடுபாம்பே

௩. திவ்யகல்யாணர்செக்திவ்வாசர் மா
நேசமுள்ளகுருமுனிக்கருளுருபதேசர்
வெந்றிமயிலேறுங்குமரேசர் தாஜா
வேடிக்கையாய்ப்பணிக்தாடிக்கொள்பாம்பே தா

௪. யண்முகத்தவர்தொழுதுவாழ்த்தி வேண்டும்
விமலனாகியகுமாரகுகமகாமூர்த்திச்
சண்முகனடிமலரைப்போற்றி தனியே
சாயாமலேகின்று நீயாடுபாம்பே தா

௫. நெற்றிவிழியதனலவ்வேளை காய்க்த
நித்தருளருமைச்சுபுத்திரசெவ்வேளை
உற்றுநெஞ்சுபதினமிவ்வேளை எதி
ரோடாமலேபணிக்தாடுவாய்பாம்பே தா

விருத்தம்.

ஆம்பிள்ளையுமக்குண்டானவர்த்தனைப்பணமளித்தோம்
எம்பிள்ளையிருங்கள்சற்றேனனச்சொல்லியுாவினேரை
போம்பிள்ளைகளவுபோனபுலனதையறியவேண்டி
பாம்புள்ளாய்குடத்திற்கையையிடுமெனப்பகருவானே.

இ-ம் முகாரி. தாளம். ஆதி.

கன்னிகள்

௧. அத்தம்பியார்வரட்டும் அத்தா
னம்மாஞ்சியும்கூடத்தான்வரட்டும்

௨. சிற்றப்பாவும்வரட்டும் எங்கள்
சிறத்தையாருஞ்சின்னுனும்வரட்டும்

௩. சாத்திரியார்வரட்டும் சின்னச்
சாமுகூடவாத்தியாரும்வரட்டும்

௪. மங்களமும்வரட்டும் எங்கள்
மதினியேமொளிமுத்தும்வரட்டும்

பெண்ணும்வரட்டும் மாயாச்
...ச்சினனும்வரட்டும்



௬. அத்தாங்காரும்வரட்டும் வந்த
லம்மங்காருடன்காச்சியாரும்வரட்டும்

௭. மூத்தய்யனும்வரட்டும் மூக்கு
மூளிநானானுமாநாஞனும்வரட்டும்

௮. அங்கச்சியும்வரட்டும் பெத்
தாச்சிமுத்தாச்சியுங்கூடவரட்டும்

௯. கெங்கைபெண்ணும்வரட்டும் ஆதி
கேசவனுடன்ராசவும்வரட்டும்.

௰. மாமியாரும்வரட்டும் மச்சின
மார்களுடன்மாமனும்வரட்டும்

௰௧ சாமியாரும்வரட்டும் சிட்டுச்
சாமரியுடனெல்லாரும்வரட்டும்

௰௨ குட்டியம்மான்வரட்டும் பல்லுக்
குஞ்சப்பாவுடன்குப்பாரும்வரட்டும்

௰௩ பொட்டையனும்வரட்டும் பொடி
பொழுவாயனுடன்பொன்னியும்வரட்டும்

௰௪ மாப்பிள்ளையும்வரட்டும் மாமன்
மருமகளும்மன்னியும்வரட்டும்

௰௫ பாரிலெல்லோரும்வரட்டும் பாம்பின்
படத்தைத்தொடச்சொல்லுவேனினியாகட்டும்.

கொச்சகம்.

வரட்டுமென்றுசொல்லிமெத்த மணிமந்தரங்கள் பண்ணி
திரட்டுருட்டும்நேர்ந்தபடிபேசிடவுமன்னேரம்
அரைகூணைத்திலேயுடைமை யச்சமுடனுங்கள்கையில்
சரப்பண்ணுகிறேனென்றார்த்தலையாரிதோன்றினனே

இ-ம் புன்னாகவராளி - தாளம்- சாப்பு.-

பல்லவி

தலையாரிவந்தானே காவல்க்காரத் தலையாரிவந்தானே

## அநுபல்லவி

மலைப்பொருநாளுமில்லா வல்லாளகண்டனெல்லாத்
தலைக்குமிஞ்சினகுல்லா வெணப்பேருடையபொல்லாத் தலை

## சரணங்கள்.

க. அசத்தியவார்த்தைபாட மாவநாடபூதிவேடம்
தசக்குக்கோர்குருபீடம் சபைக்குள்மெச்சுங்கிரீடத் தலை

உ. உடுக்குப்போல்குரல்சத்த மோங்கிக்களவின்குற்றம்
பிடித்திடவேசடுத்தம் பேசிவாங்கும்கிமித்தம் தலை

௩. வளமைக்கொடாய்கெடு மருப்மெனும்வீசைபோடு
களவுபிடிக்கநடுக் கங்குலிற்புறப்படும் தலை

௪. சல்லடங்கச்சைமூட்டும் தலைப்பாகுவல்லவாட்டும்
உல்லாசமானபாட்டு மோதிரக்கைத்தடிகாட்டும் தலை

## கொச்சகம்

வந்ததலையாரிதனை மாசனங்கள்தானபார்த்துச்
சந்தேகமுள்ளவரைத்தானழைத் துவாவெனவும்
விந்தைசொல்லுமந்தவேளைதன்னில்யாவரையும்
முந்தவேவாருமென்று முடிக்கியவனழைத்தானே

இ-ம் எதுகுலகாம்போதி- உருபகம்.

## கண்ணிகள்.

க. மாட்டுப்பெண்ணையழைக்கத் தெரியாமல்
மாமியாரைப்பிடித்தான்
சீட்டுக்கொண்டுதவணை வாங்கவந்த
சேவகனைப்பிடித்தான்

உ. வீட்டிற்கணக்கிர்தாய் வந்தவிருந்
தாடிமாரைப்பிடித்தான்
டியமுட்டுக்காரன் தாசியோடு
...ப்பிடித்தான்



௩. பாட்டுப்பாடியாசிக்க வந்திடும்
பாகவதரைப்பிடித்தான்
நாட்டுக்குள்நெல்பிடிக்க வந்திரா
வுத்தனையும்பிடித்தான்

௪. கூட்டும்வில்லைச்சந்தனம் விற்கவந்த
கோசாவியைப்பிடித்தான்
நேற்றுக்கல்யாணகோலை கொண்டுவந்த
காத்தானையும்பிடித்தான்

௫. வாத்தியார்கல்யாணம் பண்ணிவைக்க
வந்தவரைப்பிடித்தான்
சாத்திரியார்பாடம் சொல்லிடுஞ்
சமயத்திலேபிடித்தான்

௬. கூத்தாடுந்தாதர்களைப் பார்க்கவந்த
குட்டிகளைப்பிடித்தான்
வாக்கப்படும்பெண்ணுக்குப் பணம்போட
வந்தவரைப்பிடித்தான்

௭. கூக்குறலென்னவென்று பார்க்கவந்த
குப்பனையும்பிடித்தான்
தூக்கத்திற்பைபோச்சென்றே யழுகின்ற
குதாடியைப்பிடித்தான்

௮. மார்க்கத்திற்மூட்டைகொண்டு போனபேரை
வழிமறித்தேபிடித்தான்
காச்சல்கடந்தவதிப் படுங்கால
டிக்காரனைப்பிடித்தான்

௯. தீவத்திராத்திற்பெண்ணைக் கேழ்க்கவந்த
இன்னன்றுவைப்பிடித்தான்
சேவகனுக்குப்பயந் தோடிவந்த
செங்கனைப்பிடித்தான்

கொச்சகம்.

கூட்டிவந்து பாம்பின் குடத்திலே கையிட்டென்று
காட்டினாப்போது கருத்திலெண்ணம் வேறுறி
நீட்டிபுடைமைதனைநேரேயெடுத்திடுங்கா
மாட்டிமகன் சிந்தைமயக்கமுங்கொண்டனனே

இ-ம் இ-ம் மத்தியமாவதி : தாளம் : சாப்பு.

பல்லவி

என்னத்திற்குவெடுத்தோம்சைகையைத்தொட்
டென்னத்திற்கு எடுத்தோம்

அநுபல்லவி

என்னத்திற்குஎடுத்தோம்பன் — னைகத்தின்முன்னைவிட்டோம்
எடுத்தவரைத்தான்கீ — டித்திடும்லோகத்தில்
தன்னைப்பேணிக்கொள்ள — வல்லமையிருந்தாலுமே
தலைச்சொரியக்கொள்ளி — தான்தேடிக்கொண்டாற்போல் என்

சரணங்கள்

க. போயிப்போகாவெடுத் — தேனைகதிர்தா
பிறைபெற்றென்றெண்ணப்பொறுப் — பாரோசைக்காரர்
ஆயக்காரனையெழுப்பி — முன்நீர்ம
மதிவிடச்சொல்லி — யழைக்கதுபோலாச்சே என்

உ. அம்பலத்தன்னில — வல்ப்பொரிதன்னை
கவிழ்ப்பார்களோகாணு — மிப்பொழுதாகிலும்
பைம்பொன்னுடைமையைக் — கொண்டேகொடுத்துச்சான்
பார்ப்போமாகம்மாபொல் — லாப்பேன்விருதாவில் என்

ங. கையில்முன்னமேகொ — டுத்தாற்புகாரில்லை
கண்கெட்டபின்சூரி — யமைஸ்காரங்கள்
செய்வதிலென்ன — வெறும்வாயைமெல்வோாக
கலைக்கப்பட்டாற் — றின்னுமல்லவோதோ என்

சாணிக்குள்வைத்து — உருட்டித்திரட்டித்தான்
கப்பட்டமல்க்கொண் — டேபோட்டிடுவோமா
ஙங்குப — ணக்கத்தகவாமியென்
றுகிறேன் — காட்டிக்கொடாதேயும் என்



வெண்பா

என்றுயிதல் லாமெண்ணி யேக்கம்பிடித்துமிகப்
பண்ணுதயோசனைகள் பண்ணினான் — பண்ணேறி
விக்கினவிநாயகர்க்கும் வேண்டினானேயுடைமை
தக்கிவிட வேண்டுமென்று தான்

இ-ம் - இ-ம் சாவேரி - தாளம் : ஆதி.

பல்லவி

தக்கிவிடவேணும் நகையிது தக்கிவிடவேணும்

அநுபல்லவி

தக்கிடவிடவேணுமென் — றேயானமட்டுக்கும்
சமாளிப்புப்பண்ணுகிறேன் — சாமியென்பிள்ளையாரே தக்கி

சரணங்கள்

பிள்ளையாரேதொப்புக் — கரணமும்போடுகிறேன்
பெருமாளேதுளசி — மாலையுஞ்சூடுகிறேன்
புள்ளிமயில்வேலவர் — மீதிலேபாடுகிறேன்
பொருக்கேசென்றுனைப் — பூசமீராடுகிறேன் தக்கி

வடுகன்கழுத்திலவடை — மாலைசெய்துகோர்க்கிறேன்
மாரியம்மன்கோவில்க்கூத் — தாடினால்பார்க்கிறேன்
அடைவுடன்காரிமையார் — நோம்புநோற்கிறேன்
அற்புதமாய்ப்புண்யகதை — சொன்னால்கேழ்க்கிறேன் தக்கி

சாதமோர்மண்டலமுப் — பில்லாமலுண்ணுகிறேன்
சஷ்டியில்பிராமண — போசனம்பண்ணுகிறேன்
வேதியரைத்தெய்வ — மாமெனவெண்ணுகிறேன்
விஸ்வேசர்க்குவில்வப் — பூசைசெய்யஎண்ணுகிறேன் தக்கி

ஆடிப்பூரஉத்ஸவங்களில் — போய்ப்போற்றுகிறேன்
அம்பிகைகோயிலினில் — நிறைவிளக்கேற்றுகிறேன்
வாடிக்கையாய்வேலை — ரைப்பணிந்தேற்றுகிறேன்
மைந்தர்பிறந்தாலவர் — திருநாமஞ்சாற்றுகிறேன் தக்கி

விருத்தம்.

தக்குமேமௌனமாகத் தானிருந்தாற்போதாது
இக்குமெயு டைமையுள்ள சேதிநான்சொன்னேன்வேறு
பிக்கன்றிபேச்சைநீங்கள் பிரியமுடன்கேளுமென்று
சக்கியமாகவேபெண் சாதிதானேதிருநோ.

௯-ம் இ.ம் மோகனம் . தாளம் . சாப்பு.

பல்லவி

வந்ததெல்லாம்வரட்டும் சும்மாயிரும்
வந்ததெல்லாம் வரட்டும்

அநுபல்லவி

நக்தோராஜாபவிஷ்யதி கோமணத்தை
நடுச்சேலையில் கிழிக்காதேயும்போதும் வந்த

சரணங்கள்

க. இந்தவியாபாரத்துக் கேற்படலாகாது
ஏற்பட்டால்சாதிக்க வேணுமிப்போது
மந்திரஞ்செய்ததா லென்னபலன்காணும்
மலைவிழுந்தாலுந் தலையேதாங்கவேணும் வந்த

உ. பத்தாம்பேரோடேநீர் பதினோராம்பேர்கேளும்
பதாரதகாரியஞ் சிதராதொருநாளும்
குற்றங்கள்தான்சமந் தாலாட்டுக்கேத்தவல்
கூத்தாடிநானேய்த்துப் போடுகிறேனிதில் வந்த

௩. இழுக்கிழுக்கென்று திரிகிரும்முடைய
எழைமனதுகற் ருழைவயிரமோ
வழுவழுப்பேன்வா னத்தின்கீழிருந்து
மழைக்குப்பயந்து நீரப்போகுதாயினி வந்த.

௪. கல்யாணப்பந்தலில் கட்டினவாட்டுக்கி
டாய்போல்விழிக்கப் படாது சும்மாஇரும்
நல்வளமேவுந்தி ருத்தெசந்தில்வேலரை
நம்பிஇருமொரு [illegible]ன்பமுமணுகாது வந்த.



*விருத்தம்.

கோணெங்கிவந்தாலென்ன குறிபலபார்த்தாலென்ன
ஆணஞ்சொறுண்டதெட்டி யஞ்சனம்போட்டாலென்ன
வீணிக்தவார்த்தையெல்லாம் விளையாட்டுப்போலாகாச
வாணந்தான்படைவெட்டுக்கு வாய்க்குமோவாயாதன்றே.

இ-ம் எதுகுலகாம்போதி—தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

க. அஞ்சனம்போட்டாலும் போடட்டும் இனி
ஆடாதகூத்தெல்லா மாடட்டும்
பஞ்சைப்பாட்டுக்களும் பாடட்டும் அடிப்
பாடியேயோய்ந்துவாய் மூடட்டும்.

உ. கம்பளந்தான்குறி பார்க்கட்டும் போன
களவையெல்லாம்வெளி யாக்கட்டும்
கம்பளந்துபோது போக்கட்டும் பாரில்
வந்திங்கெல்லாரையுங் காக்கட்டும்.

௩. அந்தைக்கு விசைமு ளைக்கட்டும் சிறப்
பாவெயுமெல்லோரு மழைக்கட்டும்
மெத்தப்பேர்பார்த்து ம லைக்கட்டும் மனம்
வெறுப்பாகவிட்டே சளைக்கட்டும்.

௪. கந்தர்க்குப்பூஜையும் போடட்டும் தூயக்
கண்டபிசாசுபோ ஓடட்டும்
வந்தவரைச்சற்றே நீண்டட்டும் நகை
வைத்தவிடத்தைப்போய்த் தோண்டட்டும்.

வெண்பா.

இப்படிப்பெண்சாதி யியம்பவுமே காதலனும்
அப்படியே செய்வமென்று அன்னேரம்—சொற்படியே
கூட்டிவந்து பாம்புக் குடத்தவரைக் கையிடென
மாட்டமென்று சொன்னார்மறு.

கூ-ம் இ-ம் புன்னாகவராளி-தாளம்-சாபு.

பல்லவி.

எங்களாலாகாதய்யா பாம்புக்குடம்
கையிடப்போகாதய்யா.

அநுபல்லவி.

இங்கிதமறியாம லிந்தக்குடத்தினிற்கை
இடச்சொல்லித்துசங்கட்டு நீர்பளாவெகுநேர்த்தி எங்க

சரணங்கள்.

க. ஒருகட்டுவைக்கலைத் தண்ணீரில்போட்டுவிட்
டிருபத்தைந்துபேரைக்கொண்டிழுக்கச்சொல்வதுநேரோ
விருதாவில் வரிவைத்தாகிலும் நகைப்பணந்தருகிறோம்
விழித்தக்கினியில்முழு கென்றால் சம்மதிப்பாரோ எங்க

உ. சமர்த்தன் தயிரைக்குடித்த சடன் தலையிற்கையைத்
தடவினவகைபோல சாற்றவந்தீரோ நில்லும்
குழுக்குப்பண்ணியேயிந்தக் கோலங்காட்டுநீர் பாம்புக்
குடத்தையிடத்தைவிட்டெடுத்துப்போய்விடச்சொல்லும்எங்க

௩. வழிவழிபோகாமல் விதிவசமிங்குவந்தோம்
அழிவழக்குப்பேசுநீர் அதற்கு நாங்களல்ல
இழிவறிந்தால் கல்யா ணத்திற்கு வரமாட்டோம்
எழில்க்கந்தன்கிருபையா லெப்படியாகிலும் பிழைப்போம் எங்க

விருத்தம்.

கையிடமாட்டோமென்று கருதியங்கிருந்தோர்வாதஞ்
செய்யவன்னோர்களுக்குச் செலவுக்குக்கொடுத்தனுப்ப
உய்யவேயூருக்குப்போயுறுதியாய்வாழ்ந்திருந்தார்
துய்யதாய்வீட்டிலுள்ள சுயஜனம் வாழ்ந்திட்டாரே.



கலித்துறை.

தேடியுள் ளூரிலுள்ளோருந் திரட்சியுஞ் சிறந்தும்
வேடிக்கை யாய்ப்பல் வானகல் யாணமு மேபுரிந்து
நாடித்தன் னூருக்கு வந்தசம் பந்திகளுமுடனே
வாடிக்கை யாயிருந் தார்சுப சோபன வாழ்வுபெற்றே.

இ-ம் தோடி--தாளம் உருபகம்.

கண்ணிகள்.

வாடிக்கைவாழ்வுபெற்றே-இருந்தார்-மாப்பிளைமாரையுமே
அடிக்கழைத்துச்சென்றே-நெய்பாறுபா-லாறுய்விருந்துசெய்தார். (௧)

பாகுவெல்லந்தேங்காய்-கலந்துப-ருப்புத்தேங்காய்பணமும்
வாருடன்பாக்கிலையும்-நலமாய் மாப்பிளைக்கோதியிட்டார். (௨)

ஸ்தாலிபாங்கள்செய்தா-ரதற்குள்ள-சாஸ்திரந்தப்பாமல்
கோலமாயாவணியா-வட்டத்திற்குக்-கூட்டிப்போய்சீர்கள்செய்தார் (௩)

தோசைகளிட்டலிகள்-சீசந்திக்குச்-சுத்தமுருக்குக்களும்
தேசுளுத்தஞ்சீடை-வெல்லச்சீடை-தேங்குழலுமளித்தார். (௪)

தீவளிப்பண்டிகைக்கு-யழைத்தெண்ணெய்-தேய்த்துமுழுக்காட்டி
மாவரிசை புரிந்தா-ராறுமாசக்கல்-யாணஞ்செய்தார். (௫)

விருப்புடன்கடுக்கன்-மாப்பிளைக்கு-வேஷ்டிசோமன்சோடும்
பருப்புத்தேங்காய்பணமும்-மாப்பிளைக்கு-பண்பாகவோதியிட்டார். (௬)

வெங்கலப்பாக்குவெட்டிக்-கரண்டகம்-வெள்ளிப்பொற்சங்கிலியும்
வங்காளப்புகயிலையும்-மாப்பிளைக்கு-வாங்கிவந்தேகொடுத்தார். (௭)

மாமனூர்மாப்பிளைக்குப்-புரிந்தவ ரிசைகள்-மெத்தஇன்னம்
மாமுருகேசர்கிருபை-என்றுள்ளத்தில்-வாழ்த்தியேயோதியிட்டார் (௮)

## மங்களம்.

இ-ம் அசாவேரி தாளம் ஆதி.

### பல்லவி.

ஷண்முகவேலருக்குஜய மங்களம் எங்கள்
சரவணோத்பவருக்கு சுப மங்களம்.

### அநுபல்லவி.

புண்யகுணசாந்தருக்கு புகழ்ச்சைலவேந்தருக்கு
வண்மையிருசேந்தருக்கு வள்ளிமயில் காந்தருக்கு (சண்)

### சரணங்கள்.

கங்கைதிருமைந்தருக்குக் கந்தருக்கு மங்களம்
கஜமுகவரம்பருக்குப்பின் பருக்கு மங்களம்
பங்கஜமுகத்தருக்கு பன்னிருபுயத்தருக்கு
மங்களபீடத்தருக்கு வரமருள்பிரசித்தருக்குசண்.

| | | | |
|---|---|---|---|
| விருத்தம்... ... ... | ...௪௫. | நொண்டிச்சிந்து... ... ... | க. |
| கலித்துறை... ... ... | ௰௩. | சோபனம்... ... ... | ...க. |
| கொச்சகம்... ... ... | ...௰க. | கௌரிகல்யாணம்... ... | ...க. |
| வெண்பா... ... ... ... | உ. | நலுங்கு... ... ... ... | ...க. |
| கண்ணிகள்... ... ... | ...௩௪ | ஊஞ்சல்... ... ... ... | க, |
| கீர்த்தனம்... ... ... | ...உ௰. | லாலி... ... ... ... | ...க. |
| லவாய்... ... ... ... | ...உ. | ஆநந்தக்களிப்பு... ... | ... க. |
| லாவணி... ... ... ... | ...க. | மங்களம்... ... ... ... | க. |

ஆ ௱௪௬.

## கலியாண நாடகம் முற்றிற்று.

சுப்பிரமணியர் சகாயம்.



11604

# விளம்பரம்.

---

இப்புத்தகம் வேண்டுபவர்கள் ஆவிடையார்கோவில்
கி. சுந்தரசாஸ்திரிகள் இடத்தில்
கலியாணநாடகம் விலை அணா 0 8 0
மாணிக்கவாசகசரித்திர லாவணி அணா - இ
கொடுத்து பெத்துக்கொள்ளலாம்.

3243